www.LatestWalkin.com

# வி.ஏ.ஓ. தேர்வு மாதிரி வினாத்தாள் – 18

## (பொது அறிவு)

1. 'கூரம் பட்டயம்' என்பது எந்த பல்லவ மன்னனின் செப்புப் பட்டயமாகும்?
அ) பரமேஸ்வரவர்மன் ஆ) மூன்றாம் நந்திவர்மன்
இ) சிவஸ்கந்தவர்மன் ஈ) விஷ்ணு கோபன்

2. பல்லவர் காலத்தில் நெசவுத் தொழிலாளிகளுக்கு விதிக்கப்பட்ட வரி எவ்வாறு அழைக்கப்பட்டது?
அ) காணம் ஆ) குசக்காணம்
இ) தறி இறை ஈ) பாட்டம்

3. புகார் துறைமுகம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைக்கும் நூல்
அ) பரிபாடல் ஆ) நெடுந்தொகை
இ) முல்லைப்பாட்டு ஈ) பட்டினப்பாலை

4. கிரீன்விச் கோட்டிற்கு கிழக்கே செல்லச் செல்ல நேரம்
அ) குறையும்
ஆ) அதிகரிக்கும்
இ) முதலில் குறைந்து இறுதியில் அதிகரிக்கும்
ஈ) முதலில் அதிகரித்து இறுதியில் குறையும்

5. புவியின் முதல் உயிரினங்கள் எங்கு தோன்றியதாகக் கருத்து நிலவுகிறது?
அ) பாலைவனம் ஆ) கடல்
இ) பாலைவனச் சோலை ஈ) அண்டார்டிக் பெருங்கடல்

6. 'வாசாப்' என்ற முஸ்லிம் வரலாற்றாசிரியர் எந்த மன்னரின் ஆட்சி காலத்தில் தமிழகத்தின் சமூக நிலை குறித்து எழுதியுள்ளார்?
அ) முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன்
ஆ) முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்
இ) இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்
ஈ) முதலாம் மாறவர்மன் குலசேகரன்

7. குமார கம்பணாவின் தமிழ்நாட்டு வெற்றியைக் குறிக்கும் நூல்
அ) மதுரா விஜயம் ஆ) ஆமுக்த மால்யதா
இ) மனு சரிதம் ஈ) ஜாம்பாவதி கல்யாணம்

8. ஒரு பொருளின் எடை என்பது
அ) அதன் நிறையைக் குறிக்கும்
ஆ) அதன் அடர்த்தி மற்றும் நிறையைக் குறிக்கும்
இ) அதன் புவிஈர்ப்பு விசையைக் குறிக்கும்
ஈ) அதன் நிறை மற்றும் புவிஈர்ப்பு விசையைக் குறிக்கும்

9. மறவர் குல மன்னர்களில் மிகச் சிறந்து விளங்கியவர்
அ) இரண்டாம் சடையக்கத்தேவர் ஆ) இரகுநாத சேதுபதி
இ) கிழவன் சேதுபதி ஈ) இரகுநாதத் தொண்டைமான்

10. நவாப் ஆட்சிப் பகுதியின் தலைநகர்
அ) வேலூர் ஆ) ஆற்காடு
இ) செஞ்சி ஈ) சென்னை

11. பிரெஞ்சு அரசியலமைப்புச் சட்டம் உருவான ஆண்டு
அ) 1789 ஆ) 1790
இ) 1791 ஈ) 1792

12. தமிழ்நாடு சட்டமன்றத்தில் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை
அ) 1 ஆ) 6
இ) 12 ஈ) எவருமில்லை

13. 'சிவகங்கைச் சிங்கம்' என்று அழைக்கப்பட்டவர்
அ) பூலித் தேவன் ஆ) சின்ன மருது
இ) பெரிய மருது ஈ) கட்டபொம்மன்

14. இந்திய வானொலி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
அ) 1920 ஆ) 1928
இ) 1936 ஈ) 1938

15. ஆற்காடு மாவட்டத்தில் ஊரிஸ் கல்லூரியை நிறுவிய கிறித்துவ சமய பரப்புக் குழு
அ) ஆற்காடு சமய பரப்புக் குழு
ஆ) மதுரை சமய பரப்புக் குழு
இ) ஏசு சங்க சமய பரப்புக் குழு
ஈ) யாழ்ப்பாண சமய பரப்புக் குழு

16. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி 'கீழ்நோக்கிப் பரவும் கல்வித் திட்டத்தை' அறிமுகப்படுத்திய ஆண்டு
அ) 1826 ஆ) 1830
இ) 1835 ஈ) 1840

17. கர்னல் நீல் என்பவர்
அ) மணியாச்சி ரயில் நிலையத்தில் வாஞ்சிநாதனால் சுட்டுக்கொல்லப்பட்டவர்
ஆ) 1857ம் ஆண்டு புரட்சியை, வன்முறையைக் கையாண்டு அடக்கிய பிரிட்டிஷ் தளபதி
இ) ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குக் காரணமான பிரிட்டிஷ் தளபதி
ஈ) சைமன் குழுவில் இடம்பெற்றிருந்த இந்தியர்களை வெறுத்த ஆங்கிலேயர்

18. தமிழகத்தில் இஸ்ரோ அமைந்துள்ள மகேந்திரகிரி எந்த மாவட்டத்தில் உள்ளது?
அ) கன்னியாகுமரி ஆ) திருநெல்வேலி
இ) தூத்துக்குடி ஈ) இராமநாதபுரம்

19. தமிழகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த ஆற்றுப்படுகை
அ) பெண்ணையாறு ஆ) பாலாறு
இ) காவிரி ஈ) வைகை

20. 'உலக மாற்றுத் திறனாளிகள் தினம்' அனுசரிக்கப்படும் நாள்?
அ) டிசம்பர் 1 ஆ) டிசம்பர் 2
இ) டிசம்பர் 3 ஈ) டிசம்பர் 4

21. 'அகர முதலி' என்ற சொற்களஞ்சியத்தை எழுதியவர்
அ) நமச்சிவாய முதலியார் ஆ) டாக்டர் மு.வரதராசனார்
இ) ஔவை துரைசாமி பிள்ளை ஈ) தேவநேயப் பாவாணர்

22. இந்திய விமானப்படைக் கல்வி மையம் எங்குள்ளது?
அ) கிர்கி ஆ) டேராடூன்
இ) கொச்சி ஈ) ஹைதராபாத்

23. இந்தியாவின் முதல் பெண் ஐ.பி.எஸ். அதிகாரியான கிரண்பேடி, ராமன் மகசாசே விருது வென்ற வருடம்
அ) 1990 ஆ) 1994
இ) 1996 ஈ) 1997

24. சிமா பாறைகள் எந்த வகையைச் சார்ந்தவை?
அ) பசால்ட் ஆ) கிரானைட்
இ) அஸ்தினோஸ்பியர் ஈ) க்ரஸ்ட்

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

25. A:B:C:=1:2:3 எனில், $\frac{A}{B}:\frac{B}{C}:\frac{C}{A}$ யின் மதிப்பு என்ன?
அ) 2:6:28 ஆ) 1:8:18
இ) 3:4:18 ஈ) 3:6:28

26. 3 ஆட்கள் ஒரு வேலையை 10 நாட்களில் முடிப்பர். அந்த வேலையை $\frac{1}{2}$ நாளில் முடிக்க எத்தனை ஆட்கள் தேவை?
அ) 60 ஆ) 45
இ) 30 ஈ) 27

27. ₹800 குறித்த விலையுள்ள பொருளை ₹500க்கு விற்றால் தள்ளுபடி சதவீதம் என்ன?
அ) 37 $\frac{1}{2}$% ஆ) 30%
இ) 26 $\frac{1}{2}$% ஈ) 28%

28. $\cos ec(90-\theta)$ என்பது எதற்குச் சமம்
அ) $\cos ec\theta$ ஆ) $\sec\theta$
இ) $\cot\theta$ ஈ) $\tan\theta$

29. ஒரு முக்கோணத்தின் பக்கங்கள் இரண்டு பங்கு அதிகமானால் அதன் பரப்பு எத்தனை மடங்கு அதிகமாகும்?
அ) 1 மடங்கு ஆ) 2 மடங்கு
இ) 3 மடங்கு ஈ) 4 மடங்கு

30. 210 மீ நீளமுள்ள ஒரு ரயில் வண்டி 390 மீ நீளமான குகையை 60 வினாடிகளில் கடக்கிறது எனில், அதன் வேகம் என்ன?
அ) 30 கி.மீ./மணி ஆ) 32 கி.மீ./மணி
இ) 36 கி.மீ./மணி ஈ) 40 கி.மீ./மணி

31. ஒரு வகுப்பில் 7 மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் 43, 57, 83, 98, 75, 69, 58 எனில், கூட்டுச் சராசரி எவ்வளவு
அ) 62 ஆ) 57
இ) 72 ஈ) 69

32. இப்படத்தில் PRன் மதிப்பு என்ன?
அ) 57 ஆ) 42
இ) 61 ஈ) 37




33. ஒரு தளத்தைத் தீர்மானிக்கத் தேவையான புள்ளிகள் எத்தனை?
அ) 3 ஆ) 2
இ) 4 ஈ) 1

34. ஒரு பொருளின் நிலைமத் திருப்புத்திறன் செயல்படுவது
அ) சீரலை இயக்கத்தில் ஆ) எறியத்தின் இயக்கத்தில்
இ) சுழல் இயக்கத்தில் ஈ) நேர்க்கோட்டியக்கத்தில்

35. கலைடாஸ்கோப் போன்ற ஒளியியல் கருவிகளில் பயன்படும் ஆடி
அ) குவி ஆடி ஆ) சமதள ஆடி
இ) குழி ஆடி ஈ) இருபுறக் கோளக ஆடி

36. கூழ்மத் துகள்கள் தம்மீது படும் ஒளியைச் சிதறச் செய்வது
அ) டிண்டால் விளைவு ஆ) ராலே ஒளிச்சிதறல் விளைவு
இ) இராமன் விளைவு ஈ) ஃப்ரான் ஹோபர் விளைவு

37. மின்தடை எண்ணின் அலகு
அ) வோல்ட் ஆ) ஒயர்ஸ்டெட்
இ) ஓம் ஈ) ஓம் மீட்டர்

38. பீஸோ மின்விளைவைத் தோற்றுவிக்கும் பொருள்
அ) குவார்ட்ஸ் ஆ) வைரம்
இ) கார்பன் ஈ) ஸ்பீகெல்லிசன்

39. வீச்சுப் பண்பேற்றத்தைவிட அதிர்வெண் பண்பேற்றம் சிறந்தது. ஏனெனில்,
அ) உருக்குலைவு மிகக் குறைவு
ஆ) உருக்குலைவு இருக்காது
இ) உருக்குலைவு மிக அதிகம்
ஈ) உட்புற ஒலி உண்டாக்கப்படுவதில்லை

40. வைரத்தில் உள்ள பிணைப்பு
அ) அயனிப் பிணைப்பு ஆ) ஈதல் சகப் பிணைப்பு
இ) சகப் பிணைப்பு ஈ) வாண்டர்வால்ஸ் பிணைப்பு

41. கீழ்க்கண்டவற்றில் ஒன்று அதிக அளவு பிறப்பு விகிதம் கொண்ட மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) கேரளா
இ) கர்நாடகா ஈ) ஆந்திரப்பிரதேசம்

42. ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச அரிசி ஆண்டாக எந்த ஆண்டை அனுசரித்தது?
அ) 2004 ஆ) 2006
இ) 2007 ஈ) 2008

43. இந்தியாவில் மதிப்புக் கூட்டப்பட்ட வரி (VAT) நடைமுறைக்கு வந்த நாள்
அ) 01.01.2007 ஆ) 01.01.2006
இ) 01.04.2005 ஈ) 01.04. 2006

44. சிறுதொழில் வளர்ச்சி குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழு
அ) சி.ரங்கராஜன் குழு ஆ) பூதலிங்கம் குழு
இ) அனுமந்தராவ் குழு ஈ) அபித் ஹூசைன் குழு

45. 1935ம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி தொடங்கப்பட்டபோது அதன் முதலீடு
அ) 5 கோடி ஆ) 10 கோடி
இ) 15 கோடி ஈ) 20 கோடி

46. இந்தியாவை சோஷலிசத்தை நோக்கி நடைபோட வைத்த திட்டம்
அ) முதலாவது ஐந்தாண்டுத் திட்டம்
ஆ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்
இ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்
ஈ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

47. இந்தியப் பணமான ரூபாய் (Rupee) என்ற சொல் எந்த மொழியிலிருந்து பெறப்பட்டது?
அ) ஆங்கிலம் ஆ) இந்தி
இ) சமஸ்கிருதம் ஈ) உருது

48. கெட்ட பணம் நல்ல பணத்தை விரட்டும் என்பது
அ) கிரகாம் விதி ஆ) ஜே.பி. கிளார்க் விதி
இ) ராபின்சன் விதி ஈ) மியார்தல் விதி

49. டையு மற்றும் டாமனுக்கான உயர்நீதிமன்றம் எங்கு செயல்படுகிறது?
அ) டையு ஆ) பனாஜி
இ) சில்வஸ்ஸா ஈ) மும்பை

50. மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை
அ) 2 ஆ) 12
இ) 40 ஈ) 42

51. இந்தியாவின் தேசிய விளையாட்டு
அ) கிரிக்கெட் ஆ) கபடி
இ) ஹாக்கி ஈ) கால்பந்து

52. உத்தரகாண்ட் மாநிலத்தின் தலைநகரம்

www.LatestWalkin.com

அ) நைனிடால் ஆ) ராஞ்சி
இ) ராய்ப்பூர் ஈ) டேராடூன்

53. ஜம்மு காஷ்மீர் மாநிலம் இந்திய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்ட ஆண்டு
அ) 1947 ஆ) 1948
இ) 1951 ஈ) 1957

54. கர்நாடகத்தில் தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டமன்றம்
அ) ஓரவைச் சட்டமன்றம் ஆ) ஈரவைச் சட்டமன்றம்
இ) மூன்றவைச் சட்டமன்றம் ஈ) எதுவுமில்லை

55. மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து எங்கு மேல்முறையீடு செய்யலாம்?
அ) உயர்நீதிமன்றம் ஆ) உச்சநீதிமன்றம்
இ) முன்சீப் நீதிமன்றம் ஈ) உயர்நீதிமன்றக்கிளை

56. மக்களவையில் பண மசோதா ஏற்றுக்கொண்டவுடன் அந்த மசோதாவை, மாநிலங்களவை எத்தனை நாட்களுக்குள் திருப்பி அனுப்பவேண்டும்?
அ) 1 நாள் ஆ) 7 நாட்கள்
இ) 10 நாட்கள் ஈ) 14 நாட்கள்

57. பூமியில் ஒரு பொருளின் நிறை 60 கிலோவாக இருந்தால், அந்தப் பொருளின் நிறை சந்திரனில் எத்தனை கிலோவாக இருக்கும்?
அ) 0 ஆ) 10 கிலோ
இ) 60 கிலோ ஈ) 120 கிலோ

58. 1994ம் ஆண்டு ஷூ மேக்கர் லெவி என்ற நட்சத்திரம் எந்த கோளின் மீது மோதியது?
அ) வியாழன் ஆ) செவ்வாய்
இ) புதன் ஈ) சனி

59. இந்தியாவில் 2011ம் ஆண்டிற்குப் பிறகு அடுத்த மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைபெறும் வருடம்
அ) 2015 ஆ) 2016
இ) 2020 ஈ) 2021

60. உலகில் மைகா உற்பத்தியில் இந்தியா வகிக்கும் இடம்?
அ) முதலிடம் ஆ) இரண்டாமிடம்
இ) மூன்றாமிடம் ஈ) நான்காமிடம்

61. இந்தியாவில் ஆப்பிள் அதிகம் விளையும் மாநிலம்
அ) ஜம்மு-காஷ்மீர் ஆ) ஹிமாச்சலப் பிரதேசம்
இ) ஹரியானா ஈ) அஸ்ஸாம்

62. தொராய்க் காடுகள் காணப்படும் இடம்
அ) இமயமலையின் அடிவாரப் பகுதி
ஆ) கங்கை நதி முகத்துவாரப் பகுதி
இ) குஜராத் கட்ச் வளைகுடா பகுதியில்
ஈ) இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதி

63. மயூரக்ஷி நீர்மின் திட்டத்தால் பயன்பெறும் மாநிலம்
அ) ஆந்திரப் பிரதேசம் ஆ) மேற்கு வங்காளம்
இ) உத்தரப் பிரதேசம் ஈ) மகாராஷ்டிரா

64. இந்தியாவின் தீபகற்ப ஆறுகளில் மிக நீளமான ஆறு
அ) கங்கை ஆ) பிரம்மபுத்திரா
இ) கோதாவரி ஈ) கிருஷ்ணா

65. இந்தியாவில் வெளியான முதல் பத்திரிகையான பெங்கால் கெஜட்டைத் (Bengal Gazete) துவக்கியவர்
அ) ரிச்சர்டு ஜான்சன் ஆ) எம்.என்.ராய்
இ) எம்.ஜி. தேசாய் ஈ) ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி

66. 'ஆன்ட்டி செரோப்தால்மிக்' வைட்டமின் என்று அழைக்கப்படும் வைட்டமின்
அ) வைட்டமின் K ஆ) வைட்டமின் A
இ) வைட்டமின் B ஈ) வைட்டமின் C

67. மூளையின் கீழ்ப்பகுதியில் சிறிய பட்டாணி அளவுள்ள சுரப்பி
அ) தைராய்டு சுரப்பி ஆ) அட்ரீனல் சுரப்பி
இ) பிட்யூட்டரி சுரப்பி ஈ) தைமஸ் சுரப்பி

68. கணையத்தில் லாங்கர்ஹான் திட்டுகளின் ஆல்ஃபா செல்கள் சுரப்பது
அ) குளுக்கோஸ் ஆ) இன்வர்டேஸ்
இ) இன்சுலின் ஈ) குளுக்கான்

69. நிணநீர்த் திசுக்களில் ஏற்படும் புற்றுநோய்
அ) லிம்போமா ஆ) லுயுக்கேமியா
இ) சார்கோமா ஈ) கார்சினோமா

70. 'பகற்கனவை உண்டாக்கும் பூஞ்சை' என்று அழைக்கப்படுவது
அ) நியூரோஸ்போரா ஆ) ஆஸ்பர்ஜில்லஸ்
இ) கிளாவிசெப்ஸ் பர்பூரியா ஈ) வால்வேரியல்லா வால்வேஸி

71. ஃபைக்காலஜி (Phycology) என்பது
அ) ஆல்காக்கள் பற்றிய அறிவியல் துறை
ஆ) பூஞ்சைகள் பற்றிய அறிவியல் துறை
இ) காளான்கள் பற்றிய அறிவியல் துறை
ஈ) பாக்டீரியாக்கள் பற்றிய அறிவியல் துறை

72. கீழ்க்கண்டவற்றில் ஒன்று மனித ஒட்டுண்ணியாக வாழும் பாக்டீரியா
அ) பேசில்லஸ் சப்டிலிஸ் ஆ) விப்ரியோ காலரே
இ) சாந்தோமோனாஸ் சிட்ரை ஈ) லாக்டோ பாசில்லஸ்

73. தொடர்ந்து டி.என்.ஏ.வானது தூது ஆர்.என்.ஏ.வாக மாற்றப்படுவது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) மொழி பெயர்ப்பு ஆ) புரதச் சேர்க்கை
இ) படியெடுத்தல் ஈ) DNA இரட்டித்தல்

74. பசுங்கணிகத்தின் உள்ளே காணப்படும் ஒன்றோடொன்று தொடர்புடைய சவ்வினால் சூழப்பட்ட பை போன்ற அமைப்புகள்
அ) கிரானா ஆ) தைலகாய்டுகள்
இ) ஸ்ட்ரோமோ ஈ) சிஸ்டர்னே

75. ப்ராக்டோஸ்கோபி என்பது மனித உடலின் எந்த உறுப்பில் செயலாற்றும் எண்டோஸ்கோபி வகை?
அ) பெருங்குடல் ஆ) சிறுநீர்ப்பை
இ) மார்பு ஈ) மலக்குடல்

76. இம்யூனாலஜி (Immunology) என்னும் சொல்லின் 'இம்யூனஸ்' என்னும் இலத்தீன் மொழிச் சொல்லின் பொருள்
அ) விடுதலை ஆ) நோயுண்டாக்குதல்
இ) நோயிலிருந்து காப்பாற்றுதல் ஈ) மிகவும் வருந்துதல்

77. கீழ்க்கண்டவற்றில் எது வானொலியிலும், மின்தடை வெப்பநிலைமானிகளிலும் பயன்படுகிறது?
அ) தாலியம் ஆ) போரான்
இ) காலியம் ஈ) இண்டியம்

78. பாஸ்பரஸ் அமிலம்
அ) ஒரு காரத்துவமுடையது ஆ) இரு காரத்துவமுடையது
இ) முக்காரத்துவமுடையது ஈ) காரத்துவமில்லாதது

79. மிகவும் லேசான, எரியாத தனிமம் எது?

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

அ) $H_2$ ஆ) $N_2$
இ) He ஈ) Na

80. நைக்ரோம் என்பது எந்தெந்த தனிமங்களின் உலோகக் கலவை?
அ) Ni, Fe, Cr ஆ) Ni, Fe, Cu
இ) Ni, Cr ஈ) Ni, Fe

81. d தொகுதித் தனிமங்கள் அனைத்தும்
அ) உலோகங்கள்
ஆ) வேறுபட்ட இணைதிறன்கள் கொண்டவை
இ) நிறமுள்ள அயனிகளையும், அணைவுச் சேர்மங்களையும் உருவாக்குபவை
ஈ) இவை அனைத்தும் சரி

82. கலிபோர்னியம் என்ற தனிமத்தைக் கண்டுபிடித்தவர்
அ) கார்ல் மோசென்டர் ஆ) மேடம் கியூரி
இ) கிளென் சீபெர்க் ஈ) எட்வின் மேக்மில்லன்

83. லாந்தனைடுகள் எதிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்றன?
அ) மாக்னடைட் ஆ) மோனோசைட்
இ) லிமோனைட் ஈ) காஸிட்டரைட்

84. பாரா ஹைட்ரஜனின் காந்தத் திருப்புத்திறன்
அ) 0 ஆ) 1
இ) 2 ஈ) 3

85. கார உலோகங்களின் வினைத்திறன் Liலிருந்து Cs வரை கீழே செல்லும்போது
அ) குறைகிறது ஆ) பாதியாகிறது
இ) அதிகரிக்கிறது ஈ) இரு மடங்காகிறது

86. உலோக ஆக்ஸைடுகள் பொதுவாகப் பெற்றிருக்கும் பண்பு
அ) அமிலம் ஆ) காரம்
இ) ஈரியல்பு ஈ) நடுநிலை

87. குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்த தமிழக முதல்வர்
அ) பக்தவச்சலம் ஆ) காமராஜர்
இ) இராஜாஜி ஈ) ஜெயலலிதா

88. பாரதியார் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1975 ஆ) 1978
இ) 1980 ஈ) 1982

89. சாகித்ய அகாடெமி விருது வென்ற 'தமிழின்பம்' என்ற நூலின் ஆசிரியர்
அ) ரா.பி.சேதுப்பிள்ளை ஆ) மு.வரதராசனார்
இ) மா.பொ. சிவஞானம் ஈ) கி.வா. ஜெகநாதன்

90. 'தனித்தமிழ் இசைக் காவலர்' என்று அழைக்கப்படுபவர்
அ) கி.ஆ.பெ.விஸ்வநாதம் ஆ) ஈ.வெ.கி. சம்பத்
இ) அண்ணாமலை செட்டியார் ஈ) உ.வே. சாமிநாத ஐயர்

91. நெய்தல் நிலக் கடவுள் யார்?
அ) திருமால் ஆ) வருணன்
இ) இந்திரன் ஈ) கொற்றவை

92. எந்த நாட்டிற்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் இரட்டை சதம் அடித்தார்?
அ) தென் ஆப்ரிக்கா ஆ) ஆஸ்திரேலியா
இ) பங்களாதேஷ் ஈ) இங்கிலாந்து

93. ஹாங்காங் ஓபன் பாட்மிண்டன் 2010 விளையாட்டுப் போட்டியில் பட்டம் வென்ற வீராங்கனை
அ) பிழூ இன்
ஆ) ஷிக்ஷியான் வாங் ஐ
இ) சாய்னா நெவால்
ஈ) கொனேரு ஹம்பி

94. விக்கி லீக்ஸ் இணையதளத்தின் தலைவர் ஜூலியன் அசாஞ்சே எந்த நாட்டைச் சார்ந்தவர்?
அ) இங்கிலாந்து ஆ) ஆஸ்திரேலியா
இ) ஜெர்மனி ஈ) அமெரிக்கா

95. மகாராஷ்டிராவில் ₹42,000 கோடி செலவில் அணுமின் நிலையம் அமைக்க இந்தியா சமீபத்தில் எந்த நாட்டுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது?
அ) பிரான்சு ஆ) அமெரிக்கா
இ) ஆஸ்திரேலியா ஈ) சீனா

96. நியூசிலாந்துக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா எந்தக் கணக்கில் கோப்பையை வென்றது?
அ) 4-1 ஆ) 3-2
இ) 4-0 ஈ) 5-0

97. கணித மேதை இராமானுஜத்தின் சொந்த ஊர்
அ) சென்னை ஆ) கும்பகோணம்
இ) வத்தலகுண்டு ஈ) வேலூர்

98. 'ஹெப்டத்லான்' என்பது எத்தனை தடகளப் போட்டிகளைக் கொண்டது?
அ) 3 ஆ) 5
இ) 7 ஈ) 9

99. சென்னை ஓபன் 2010ம் ஆண்டு பட்டம் வென்ற மரின் சிலிச் எந்த நாட்டைச் சார்ந்தவர்?
அ) குரோஷியா ஆ) சுவிட்சர்லாந்து
இ) பெல்ஜியம் ஈ) தாய்லாந்து

100. மலேசிய இந்திய காங்கிரஸ் கட்சியின் தற்போதைய தலைவர் யார்?
அ) டத்தோ சாமிவேலு ஆ) பா.குழந்தைவேலு
இ) எஸ்.குழந்தைசாமி ஈ) ஜி. பழனிவேல்

## விடைகள் :

1.அ), 2.இ), 3.ஈ), 4.ஆ), 5.ஆ), 6.ஈ), 7.அ), 8.ஈ), 9.இ), 10.ஆ), 11.இ), 12.அ), 13.ஆ), 14.இ), 15.அ), 16.ஆ), 17.ஆ), 18.அ), 19.இ), 20.இ), 21.ஈ), 22.ஈ), 23.ஆ), 24.அ), 25.இ), 26.அ), 27.அ), 28.ஆ), 29.ஈ), 30.இ), 31.ஈ), 32.இ), 33.அ), 34.இ), 35.ஆ), 36.அ), 37.ஈ), 38.அ), 39.ஆ), 40.இ), 41.ஆ), 42.அ), 43.இ), 44.ஈ), 45.அ), 46.ஆ), 47.இ), 48.அ) , 49.ஈ), 50.ஆ), 51.இ), 52.ஈ), 53.ஈ), 54.ஆ), 55.அ), 56.ஈ), 57.இ), 58.அ), 59.ஈ), 60.அ), 61.ஆ), 62.அ), 63.ஆ), 64.இ), 65.ஈ), 66.ஆ), 67.இ), 68.ஈ), 69.அ), 70.இ), 71.அ), 72.ஆ), 73.இ), 74.ஆ), 75.ஈ), 76.அ), 77.ஈ), 78.ஆ), 79.இ), 80.அ), 81.ஈ), 82.இ), 83.ஆ), 84.அ), 85.இ), 86.ஆ), 87.இ), 88.ஈ), 89.அ), 90.இ), 91.ஆ), 92.அ), 93.இ), 94.ஆ), 95.அ), 96.ஈ), 97.ஆ), 98.இ), 99.அ), 100.ஈ)

www.LatestWalkin.com